www.padippakam.com

# செஞ்சக்தி

நன்கொடை 6 அணி 1 வகுப்பு 2 1996-05-20 மக்கள் விடுதலை முன்னணியின் (J.V.P) மத்திய ஏடு

# ஈழத்தலைவர்கள் அவசரகாலச்சட்டத்தை நிறைவேற்றினார்கள்

தமிழ்மக்களின் விடுதலைக்காகவே நாம் போராடுகிறோம் எனக்கூறும்
மிழீழ ஜனநாயக்கட்சியும் ( ஈ.பி.டி.பி) , தமீழிழ விடுதலைக்கழகம்(புளொட்)
ராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் மீண்டும் தொடர்ந்து
வசரகாலச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தபோதும், இம்முறை
வசரகாலச் சட்டத்தை நாடுமுழுவதும் பிறப்பிப்பதற்கான
ராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திற்கு முன்பு இந்த் கட்சிகள்
யல்பட்டவிதமும், வாக்கெடுப்பு நடத்தும் தினத்தன்று அவர்கள் செயல்பட்ட
றையினாலும், அந்த அரசியல்கட்சிகள் குறிப்பாக அவசரகாலச்சட்டம்
றப்பிப்பதற்கு ஆதரவு அளித்ததன் மூலம், பொதுவாக அவர்களது
ரசியல் செயல்பாடுகளிலிருக்கும் அருவருக்கத்தக்க சந்தர்ப்பவாத
ாள்கையை மிகவும் தெளிவாக படம்பிடித்து வெளிப்படுத்தியுள்ளார்கள்
ன்பதை " செஞ்சக்தி" மிகவும் பொறுப்புணர்வோடு அவதானிக்கின்றது.

தாம் உண்மையாகவே தமிழ்
களுக்காகவே செயற்படுகிறோம்
றால் எப்படியான சூழ்நிலையின்
ும், அம்மக்களுக்கெதிராகப்
ன்படுத்தக்கூடிய சகலவிதமான மக்கள்
ராத சட்டத்தை நிறைவேற்றும்போது
ற்கு ஆதரவு அளிக்க அக்கட்சிகளுக்கு
யமான காரணிகள் எதுவும் இருக்க
யாது.எனினும் மேற்கூறிய கட்சிகள்
ாடர்நது செயற்பட்டுக்
ாண்டிருப்பது முழுமையாக
ற்கெதிர் திசையிலேயாகும். குறிப்பாக
ர்கள் அவசரகாலச்சட்டம் போன்ற
லச்சத்தனமான ( அரசாங்கத்தால்
் மக்களுக்கு மிக மூர்க்கத் தனமான
றயில் அவசரகாலச் சட்டதைப்
விக்கிறது என்று நன்றாகத்
ிந்துகொண்டும் ) நிறைவேற்றி
ள்வதற்காக அரசாங்கத்திற்கு ஆதரவு
க்கிறார்கள். இவ்வாறு அவசர
ச்சட்டத்தை பிறப்பிப்பதில் இந்த
ழ்க்கட்சிகள் தாம் தமக்கே
யப்படுத்திக்கொள்வதுமிகவும்
த்தனமான் பிற்போக்கு அரசியல்
ர்ப்பவாதத்தையேயாகும். இங்கே
ர்கள்கூறும் நியாயம் என்னவெனில்
டிடியை தோற்படிப்பதற்காக
ரவளித்தால் பரவாயில்லை
தேயாகும். ஆயினும் முழுநாட்டு
ளும் அனுபவமூலமாக தெரிந்து
ண்டிருப்பதும், அனுபவிப்பதும்
மையாகவே எல்டிடியைத்
ற்கடிப்பதற்காக அல்ல.
ட்டதைப் பாவித்துக்கொண்டு
கிலும் தெற்கிலும் ஒடுக்கப்பட்ட
் மிலேச்சத்தனமான முறையில்
செய்யப்படுவதும், சித்திர
க்குள்ளாகுவதும். கொல்
டுவதற்குமேயாகும். இது மிகத்
வாக முழு உலகமக்களாலும் ஏற்றுக்
ளப்பட்ட உண்மையாகும். இந்த
யல்கட்சிகளின் சந்தர்ப்பவாதம்
ளவு துஷ்டத்தனமானதும் வெட்கக்
னதும் ஒன்றென்று தெளிவுபடுவது,
் பகிரங்க ரகசியத்தைப்பற்றி
தெளிவாக புரிந்துகொண்டிருக்கும் இவர்கள் எந்தவிதமான கூச்சமின்றி அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆதரவு வழங்குவதன் மூலம் இவர்களது பச்சோந்தித்தனமான நடவடிக்கை என்னவென்று நன்றாகப்புரிகிறது.

இதேவேளை புளொட்., ஈபிடிபி போன்ற அரசியல் கட்சிகள் எதிர்பார்ப்பது எப்படியாவது அரசாங்கத்தின் மூலம் எல்டிடியை தோற்கடித்து தமது குறுகிய அரசியல் நோக்கத்தை செயல்படுத்துவதற்காக, வட-கிழக்கு பிரதேசத்தை திறந்துகொள்ளும் பிற்போக்குத்தனமான நோக்கத்திற்காகவேயாகும். அந்த சுயநலமிக்க செயல்பாட்டை நிலைநிறுத்திக்கொள்வதற்காக முதலாளித்துவ இராணுவம் எவ்வளவு தமிழ்மக்களைக்கொன்று குவித்தாலும் பரவாயில்லை என்பதை இம்முறை அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவு அளித்ததன் மூலம் அவர்கள் நிருபித்திருக்கிறார்கள் என்பதை " செஞ்சக்தி" தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது.இம்முறை நடந்த அவசரகாலச்சட்ட விவாதத்திற்கு முன்பு மீண்டும் தமக்கு வடக்கில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தையும் வாய்ப்புக்களையும் பெற்றுத்தரும்படி புளொட்டும் ஈபிடிபியும் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தபோதும் அரசாங்கம் அதை (கவனத்திற் கெடுக்காத) பாரா முகமான "செவிடன்காதில் ஊதிய சங்காக"க் கொள்கையைப் பின்பற்றியது. இவர்கள் தொடர்ந்து இடைவிடாது அரசாங்கத்திடம் தமது வேண்டுகோளை முன்வைத்து அது நடைபெறாத பட்சத்தில்இந்த நிலைமைகளால் ஏறபடும் தமது எதிர்கால அரசியல்பற்றிய மிகவும் கடுமையான சவால் ஒன்றுக்கும் முகம்கொடுக்கவும், அதற்கெதிராக

→ 5.

## காவாலி தினகரன் ஜேவிபியைப் பற்றி பொய்புரட்டு எழுதுகிறது

அரசாங்கத்தின் பச்சைப்பொய்ப் புரட்டுகளை வெளியிடும் தினகரன் எனும் படங்கில் கடந்த 14ம் தேதி ஆசிரியர்தலைப்பில் ஜேவிபியைப்பற்றி எழுதியிருக்கும் பொய்புரட்டுகளை" செஞ்சக்தி" மிகவும் அருவருக்கத்தக்க முறையில் கண்டிக்கிறது. பொதுஜன ஐக்கியமுன்னணி அரசாங்கத்தின் கழிவை அகற்றி தமதுவயிற்றை நிரப்புவதற்காகவும் கூலிக்காக எழுதும் இந்தக் காவாலிகள் திடீரென ஜே.வி.பியைப்பற்றி எழுதமுற்பட்டிருப்பதைப்பற்றி விழிப்பாய் இருக்கும்படி மக்களுக்கு "செஞ்சக்தி" தேவையோடு கேட்டடுக்கொள்கிறது தினகரனில் கூலிக்காக அரசின்கழிவை அகற்றும் "ஓடுகாலி" ஆசிரியர் செஞ்சட்டைக்கு அஞ்சிநடுங்கினாலும், மக்கள் செஞ்சட்டைகளோடு வரும் அரசியலுக்கு ஆதரவளிப்பதால் ஜேவிபி அங்கத்தவர்கள் செஞ்சட்டை அணிவது மிகவும் பெருமையோடு என்பதை அவர்புரிந்துகொள்ள வேண்டும்.வயிற்றுப்பிழைப்புக்காக எழுதும் காவாலி தினகரன் முதல் அனைத்து மக்கள்துரோகிகளும், "நேற்றையப் பொழுதை கனவாகவே கருதினர்." ஆனால் " செஞ்சட்டைக்கார்ர்களின்" எதிர்பார்ப்பு இன்றைய பொழுது கனவில்லையென்றும் அது நாளையபொழுதில் யதார்த்தமாக மாறும் என்பதில் உறுதியாகப்புரிந்துகொண்டிருப்பதால் இவ்வாறு அஞ்சி உளறும் நபர்களுக்கு அடிபணிய மாட்டார்கள் என்பதை மக்கள் நன்றாக தெரிந்துவைத்திருக்கிறார்கள. இவ்வாறு கூலிக்காக வக்காலத்து வாங்கும் தினகரன் ஆசிரியர் அஞ்சுவது வேறெதுவுக்காகவும் அல்ல,ஜே.வி.பி தற்போது தமிழ்மக்கள் மத்தியில் பரப்பட்டிருக்கும் இனவாத, பிரிவினைவாத போக்குக்கு எதிராக தமிழ்,சிங்கள, முஸ்லிம் மக்களோடு ஒன்றிணைந்து வேகமாக இயங்க ஆரம்பிக்கப்பட்டிருப்பதாலும், அதோடு மிகப்பரந்தளவில் தமிழ் மக்களை தெளிவுபடுத்துவதற்காக தமது பத்திரிகையான " செஞ்சக்தி" மீண்டும் வெளிவரத்தொடங்கியதே என்பதில் சந்தேகமில்லை. இவ்வளவு காலமும் தாம் நினைத்தபடி பொய்புரட்டல்களை உளறி, தமிழ் மக்களை முதலாளித்துவ, சிறுமுதலாளித்துவ அரசியல் சிறையில் அடைப்பதற்கு "கொந்தராத்தை"

பூர்த்திசெய்துகொண்டிருக்கும் இந்தப் "பக்காத் திருட்டு " எழுத்தாளர்கள் ஜேவிபி தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் நிலைகொள்வதாலும் மேலும் தமது இலாபகரமான புரட்டல் பாதையில் சுதந்திரமாக செல்லமுடியாது என்பதாலும் தமது வயிற்றுப்பிழைப்பு ஆபத்துக்கு முகம் கொடுப்பதாலும் இப்படி பயந்துநடுங்குகிறார்கள் என்பதே "செஞ்சக்தி" கருத்து.

எப்படியாயினும் தினகரன் என்னும் காவாலிக்கு ஒன்றை சுட்டிக்காட்டவேண்டியுள்ளது. ஜே.வி.பியைக் கவனித்துக்கொள்ள இந்நாட்டு மக்கள் இருக்கிறார்கள். அதனால் அரசாங்கத்திற்கு ஜேவிபியை "கண்காணித்துக்கொள்ள" வக்காலத்து வாங்குவதற்கு தினகரன் அவசரப்படத்தேவையில்லை. ஜேவிபியைக் கண்காணிப்பது எப்படி என்றாலும் இப்போதிருந்தே ஜேவிபிக்கு எதிரான இரத்தவெறிபிடித்த சதிகளை நடைமுறைப்படுத்த முற்படுவதனால் தினகரன் போன்ற "ஓடுகாலிகளை" மக்கள் நன்றாகக் கண்காணிக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



## அவசரகாலச்சட்டத்திற்கு எதிராக வாக்களிக்கும்படி கேட்டு அனுப்பிய கடிதம்

இம்மாதம் 6ம் திகதி நிறைவேறப்பட்ட மக்கள் விரோத அடக்குமுறை மிகுந்த அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக தமது கைகளை உயர்த்தவேண்டாம் என்று எமது கட்சியான மக்கள் விடுதலை முன்னணி இவ்வளவு காலமும் அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவளித்து வந்த எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் 01.06.96 அனுப்பிய கடிதம் அதில் தமிழ்மொழிபெயர்ப்பில் தமிழ் எம்.பி.அனைவருக்கும் கையளிக்கப்பட்டது.

98/19, பஞ்சிகாவத்தைவீதி

கொழும்பு-10

***கனம் மதிப்புக்குரியவர்களே,***

## அவசரகால சட்டத்தைத் தோற்கடிப்பதற்கு வாக்களியுங்கள்

கடந்த சில வாரங்களாக இலங்கைவாழ் மக்கள் முகம் கொடுத்த நெருக்கடி மிக்க நிலைமைகளை கவனத்தெடுத்திருப்பீர்கள் என நாம் நம்புகின்றோம். இலங்கை மின்சாரசபை தனியார்மயமாக்கலுக்கு இரையாக் குவதற்கு எதிராக தொழிலாளர்களின் எதிர்ப்பு நடவடிக்கையின் முன்னால், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கையாண்ட முறையைப்பற்றி மிக உன்னிப்பாக நோக்கினால், நீங்களும் பல பிரச்சினைக்களுக்கு உள்ளாகியிருப்பீர்கள் என்று நாம் நினைக்கின்றோம். குறிப்பாக, பணம், காடையர், ஏனைய அடக்கு முறைகளை எதிர்பார்க்காத சிங்கள, தமிழ், முஸ்லிம் ஒடுக்கப்பட்ட மக்களின் வாக்குகளால் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் எவருக்கும், எம்கண்முன்னால் வளர்ந்துவரும் இந்நிலைமைகளையிட்டு கலவர மடையாமல் இருப்பதற்கு எவ்வித காரணமுமில்லையென்றே நாம் நினைக்கின்றோம். எமக்கிடையே பாரிய அரசியல் வேற்றுமைகள் இருந்தாலும், ஜனநாயகத்தைப் பாதுகாத்து உறுதிப் படுத்துவதற்கான நடவடிக்கைகளில் எந்தவிதமான மாறுபாடும் இருக்கமுடியாது என்றே நாம் கருதுகின்றோம். ஆகவே நம் முன்தோன்றியிருக்கும், மிகப் பாரதூரமான காரணிகள் பலவற்றை உங்கள் கவனத்திற்கு உட்படுத்தவேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். அது பொதுவாக முழுநாட்டு மக்களுக்குரிய ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், உறுதிப்படுத் துவதற்கும், வெற்றிகொள்வ தற்குமான நேர்மையான தேவையோடு மாத்திரமேயாகும்.

நாடுபூராவும் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்த தற்போதைய அரசாங்கம், "தமிழீழ விடுதலைப் புலிகளின்அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்கவே அதை நடைமுறைப் படுத்தினோம்" என்று மக்களுக்கு கூறியது. ஐக்கியதேசியக்கட்சி போன்று அவ்வதிகாரத்தை பாவித்து அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடதாம் எண்ணவில்லையென்றும் அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்தவர்கள்பொறுப்புணர்வோடு கூறினார்கள். ஆயினும் அந்த அறிக்கைக்கு மாறுபட்ட நிலைமையே நடந்துள்ளது.

* சட்டரீதியான தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த, தனியார் மயத்திற்கு எதிரான வேலைநிறுத்தத்தை அடக்கி ஒடுக்குவதற்கு அவசரகாலநிலைமையை அரசாங்கம் மிகவும் அருவெறுக்கத்தக்க முறையில் பாவித்தது. அவசரகால சட்டவிதிகளின் படி அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டு கடமைக்கு வராத தொழிலாளர்களின் அசையும் அசையா சொத்துக்கள் தேசியமயமாக்கப்படும் என்று பிரகடனப்படுத்தி பொலிஸாரையும் இராணுவத்தினரையும் பயன்படுத்தி, தொழிலாளர்களை பலவந்தமாக அழைத்துவந்ததும், தொழிற்சங்க செயற்குழு உறுப்பினர்களை கைதுசெய்ததும் அரசாங்கத்தின் சாதாரண சட்டத்தின் கீழ் அல்ல, முழுக்க முழுக்க அவசரகாலச் சட்டத்தின் கீழேயாகும்.

* டெலிகம்' தொழிற்சங்க செயற்குழு உறுப்பினரான திரு. திஸாநாயக்க அவர்களின் நீர்கொழும் பிலிருக்கும் அவரதுவீட்டிற்கு 31-05-1996 நடுநிசி நேரம் சென்ற 'இனந்தெரியாத துப்பாக்கி கும்பல்' அவரைச் சுட்டுக் கொலைசெய்வதற்கு முயற்சிசெய்துள்ளது. ஆயினும் அத்துப்பாக்கிக்கும்பலிடமிருந்து சாமர்த்தியமாகத்தப்பி தன் உயிரைப்பாதுகாத்திருக்கிறார். இந்த இனந்தெரியாத துப்பாக்கிக் கும்பல் திரு. திஸாநாயக்காவை தேடிவந்த காரணம் அவ்வேளையிலும் முடிவுறாமலும், தீர்க்கப்படாமலிருந்த இலங்கை மின்சாரசபை போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, ஜூன் 3ம் தேதியிலிருந்துவேலை நிறுத்தம் செய்வதற்கு 'டெலிகம்'தொழிற்சங்கம் எடுத்திருந்த தீர்மானத்தை தடுத்து நிறுத்துவதற்கும் அதன்மூலம் 'டெலிகம்'தொழிலாளர்களைப் பயமுறுத்துவதற்குமேயாகும்.

* முன்னைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் இதுபோன்ற நிலைமைகளின்போது. மேற்கண்ட வாறு தனதுகுறிக்கோளை நிறைவேற்றி கொள்வதற்கு. இவ்வாறான 'இனங்காணமுடியாத துப்பாக்கிக் கும்பல்' இருந்தது என்பதை நாம் எவரும் மறந்திருக்க முடியாது. அவர்களை அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் பொலிஸாருக்கும் தான் இனங்காணமுடியாதிருந்தது. மக்கள் யாரென்று அறிவர். எப்படியாயினும் மீண்டும் இந்த 'இனங்காண முடியாத துப்பாக்கிக்கும்பல்' தோன்றுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது அவசரகாலச் சட்டமெனும் அடக்குமுறை சட்டம்தான் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். 'அவனது'(ஆயுதக்கும்பல்) மீள்வருகை முழுநாட்டு மக்களாலும் கடுமையாக கண்காணிப்புக்கு உட்படுத் தப்படவேண்டிய ஒன்றென்று இங்கு நாம் வலியுறுத்து கின்றோம்.

* 01-06-1996 பிற்பகல் 3.30 முதல் 4.00 காலப்பகுதியில் பொலிஸ் அதிகாரி உதயபால என்பவரின் தலைமையில் கொம்பனித் தெரு பொலிஸ் உட்பட ஏனைய பொலிஸ்நிலைய பொலிஸ்குழுக்களும் வந்துநவசமசமாஜக் கட்சி காரியாலயத்தை சோதித்துள்ளது. அக்காரியாலயத்திலிருந்த ஆவணங்களை சுமார் இரண்டு மணித்தியாலமாக சோதனையிட்ட பொலிஸார், அங்கிருந்த அனைவரது பெயர், ஊர் போன்ற விபரங்களை குறித்துக் கொண்டே வெளியேறியபோது "சந்தேகத்திற்கிடமாக ஏதோ நடப்பதாக எமக்குத் தெரியவந்தது. அதனால்தான் வந்தோம்" என்று கூறியுள்ளனர்.

பயங்கரமான அடக்குமுறை நிலவிய முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ்கூட, சட்டரீதியான அரசியல் கட்சியின் காரியாலயத்தினுள் பொலிஸார் புகுந்து இத்தகைய சோதனை நடத்தியதாக நாம் கேள்விபடவில்லை.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக்கட்சி சட்டரீதியான அரசியல்கட்சியை அவசர காலச்சட்டத்தின் கீழேயே தடைசெய்தது. தற்போதைய அரசாங்கம் சட்டரீதியான அரசியல் கட்சியின் காரியாலயத்தை அவசரகாலச்சட்டத்தின் கீழேயே சுற்றிவளைக்க ஆரம்பித்திருக்கின்றது. எனவே, சரித்திரத்தை கேலிக்கூத்தாக்க விரும்பாதவர்கள் என்றஅடிப்படையில், இதுபோன்ற சம்பவங்களைக் கண்டும் காணாமலிருக்க எம்மால் முடியாதுள்ளது என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நாம் நம்புகிறோம்.

இந்த வெங்கொடுமைமிகுந்த சம்பவங்கள் எமக்கு கூறுவதுயாதெனில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய இனத்தைச் சேர்ந்த இலங்கையரின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிப்பதற்காகவும், அடிப்படை மனித உரிமைகளைப் பறித்துக் கொள்வதற்காகவும் தற்போதைய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை மிகவும் கடுமையானமுறையில் கொடூரமான போக்கில் உபயோகிக்கிறது எனபதேயாகும். கடந்து வந்திருக்கும் அடக்குமுறை, கொடுமைமிகுந்த கடந்த காலத்தை மறக்காததால், இந்தப் போக்கு தற்போதுவளர்வதை நாம் யாரும் கைகட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. ஐக்கிய தேசியக்கட்சி அடக்குமுறை மிகுந்த ஆட்சியின்போது கொடுமைகளுக்கும் அழிவுகளுக்கும் முகம் கொடுத்து அதிலிருந்து மீட்சிபெறவேண்டும் என்ற காரணத்தினால் உங்களை பாராளுமன்ற உறுப்பினராய்தேர்ந்தெடுத்துள்ளனர். மீண்டும் அந்த வெறிபிடித்த கடந்த காலத்திற்கு செல்வதற்கு எவ்வழியிலும் தயாரில்லாத ஒடுக்கப்பட்ட இந்நாட்டு மக்களின்மீது கடுகளவேனும் அக்கறையுள்ள எவரும் அதுபோன்ற நிலைமை தேவையாய் இருக்கிறதென்று நாம் நினைக்கவில்லை. அதனால் இந்நிலைமைகளை அவததானித்து, நாம் உங்களிடம் மிகமுக்கியமான வேண்டுகோள் ஒன்றை விடுக்கின்றோம்.

இம்மாதம் ஜூன் 06 ம் தேதி விவாதத்திற்கு எடுக்கப்படும் அவசரகாலச்சட்ட நீடிப்பு வாக்கெடுப்பின் போது அதற்கெதிராக வாக்களியுங்கள். அதன்மூலம் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக உங்களிடமிருக்கும் விழிப்பு நிலையை வெளிப்படுத்தும்படியும், ஜனநாயக விரோத அடக்குமுறைக்கு முழுநாட்டுமக்களும் பலியாகும் வரை பார்த்திருக்காமல் குறைந்த பட்ச எதிர்ப்பைக்காட்டும் படியும், அதன்மூலம் அரசு நடைமுறைப்படுத்த முற்படும் கொடுமைமிக்க பாதைக்கு மீண்டும் எக்காரணத்ததைக்கொண்டும் போகக்கூடாது என்பதை முன்னெச்சரிக்கையாக எடுத்துகாட்டவும்.

உங்களுக்காக வாக்களித்த சிங்கள, தமிழ், முஸ்லிமாகிய இலங்கைவாழ் மக்களின் ஜனநாயகத்தை பாதுகாக்கும் பெயரால், இந்த மிலேச்சனத்தனமான, பலாத்கார மிக்க, அவசரகாலச் சட்டத்தை தோற்கடிப்பதாக உங்களது வாக்கைப் பாவிப்பதற்கு உங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும், சக்தியும் மனோதிடமும் துணிச்சலும் கிட்டவேண்டுமென்று இறுதியாக நாம் வேண்டுகிறோம்.

நன்றி
இப்படிக்கு
உண்மையுள்ள

**எம். டில்வின் சில்வா**
பொதுச்செயலாளர்
***மக்கள் விடுதலை முன்னணி***
01- ஜூன் 1996

## இனவாதப் பொறியினுள் சிக்காமல் இருப்பதென்றால்.

***3ம் பக்கத்திலிருந்து....***

இலங்கையின் பிரிவினை வாத மனநிலை கொண்ட தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் அமெரிக்க தலையீடு தீர்மானிக்கப்பட்டதும் இப்படித்தான். இலங்கையின் பிரிவினை வாத அமைப்பை தமது உபாயத்தின் ஊடாக கொண்டு சென்றதும் அப்படித்தான். இந்தியாவை பிரிக்க வேண்டிய தேவையே ஏகாதிபத்தியவாதிகளுக்கு முதல் தேவையாய் இருந்தது. ஆனால் அன்றைய சோவியத் நாட்டோடு இந்தியா நட்புறவு கொண்டிருந்ததால் இந்தியாவை பிரிப்பதற்காக அமெரிக்காவால் தயாரிக்கப்பட்ட திட்டம்தான் 'பிரம்மபுத்திர' திட்டம். இந்தியாவை பிரிப்பதற்கான சிறந்த சாதனமாகவே இலங்கை பிரிவினை வாதத்திற்கு அவர்கள் உதவி செய்தது.

**நிபாமுவா:** ஏகாதிபத்தியத்திற்குள் வியாபார சந்தையை மத்தியத்துவம் படுத்தப்பட்டிருப்பதாகவும், பலவித அமைப்புகளின் ஊடாக சில நாடுகளை ஒன்று சேர்த்துக் கொண்டிருப்பதற்காகவும் சிலர் கூறுகின்றனர். அந்நிலைமையில் விஷேசமாக பழைய சோவியத் நாடு இல்லாத நிலைமையில் ஏகாதிபத்தியவாதிகள் செயல்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். அது உண்மையெனில் பிரிவினைவாதத்திற்கும், அதற்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறதல்லவா?

**தோழர் டில்வின் சில்வா:-** நாம் லெனின்வாதிகள் என்ற வகையில ஏகாதிபத்தியத்தை அறிந்து கொள்வதற்கான அடிப்படை இலட்சணங்கள் சில இருக்கின்றன என்றாலும், 'பிரிவினைவாதம்' என்பது ஏகாதிபத்திய வாதத்தை அறிந்து கொள்ளும் அடிப்படை இலட்சணமல்ல.

தொடரும்....

படிப்பகம்

www.padippakam.com



# இனவாதப் பொறியினுள் சிக்காமல் இருப்பதென்றால்.

**"இனவாத பொறியினுள் சிக்காமலிருப்பதென்றால்"..... என்ற தலைப்பின் கீழ் முதலில் சிங்கள மொழியில் மாத்திரம் அச்சிடப்பட்ட சிறிய புத்தகம், வெகு சீக்கிரமாக தமிழ்மொழிக்கு மொழிபெயர்க்கும் உயர்ந்த பட்ச தேவை ,எம்மத்தியில் மிகவும் உயர்வான இடத்திலேயே இருந்தது. ஆயினும், தவிர்க்க முடியாத கஷ்டநிலையினால் செய்து முடிக்க இன்று எங்களால் முடியாமல் உள்ளது. எப்படியாயினும் அந்த கஷ்டமான நிலைமைகளை தோற்கடித்து,அப்புத்தகத்தை தமிழ்மொழியில் அச்சிடும் இலக்கை நோக்கிபோகும்,மிகவும் உறுதியான வேலைத்ததிட்டமொன்று இப்போது எம்மத்தியில் இருக்கிறது.**

**இந்தப் புத்தகம் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்காவும் அதன்செயலாளர் தோழர் டில்வின் சில்வாவுடன் எமதுசிங்கள மொழி பத்திரிகை நியமுவாவுடன் நடாத்திய நேர்காணல் நிகழ்ச்சியின் மூலம் தயாரிக்கப்பட்டது.**

**தற்போது இலங்கையில் தேசிய பிரச்சினை ( நெருக்கடி)தொடர்பாக பலவிதமான திரிபுபடுத்தல்களும் சிக்கல்களும் உயர்ந்த அளவில் காணக்கூடியதாக இத்தருணம் எமக்கு தெரிகிறது. இந்தப் பிரச்சினை தொடர்பாக சகலரும் தமிழ் அல்லது சிங்கள இனவாதத்திற்கு பலியாகும் அபாயம் இந்நிமிடத்தில் நேர்ந்துள்ளதை. எமக்கு காட்டுகிறது. ஒருபக்கம் இனவாதத்திற்கு எதிராக தொடுக்கப்படும் நடவடிக்கைகளினால் இன்னொரு இனவாதத்தால் பலவழிகளிலும் பிரச்சினை உக்கிரமடையச்செய்வது மாத்திரமே. இவ்வாறான நிலைமைகளின் மத்தியில் தேசிய பிரச்சினை தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு ,மிகத் தெளிவாக சமூகத்திற்கு முன் வைப்பதற்கும் தெளிவுபடுத்துவதற்கான தேவை தோன்றியுள்ளது. எல்லாவிதமான இனவாதத்திற்கு எதிராகவும், எல்லாவிதமான இனவாதத்தைத் தோற்கடிக்கவும் மக்கள் விடுதலைமுன்னணியினால் எடுக்கப்படும் முயற்சிகளை முதலாளித்துவ வெகுஜன ஊடகத்தின மூலம் பலதிரிபு படுத்தல் மூலமே வெளியிடப்படுகின்றது. எனவே இப்போதிருந்தே "செஞ்சக்தி" பத்திரிகைமூலமாக பகுதிவாரியாக வெளிவரும் இப்புத்தகம், அதுஎல்லோருக்கும் கொடுக்கப்படும் விடையாகவும் மக்கள் மத்தியில் மக்கள் விடுதலை முன்னணி பற்றி புரிந்துணர்வை வளர்க்கவும் செய்யும்.**

**நியமுவா: தற்போதைய பாரிய நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டிருக்கும் தேசிய பிரச்சினை, இலங்கை மண்ணில் அதன் தோற்றமும், வியாபித்தலையும் நீங்கள் இனம் காண்பது எப்படி?**

**தோழர் அமரசிங்க:** இலங்கையில் தேசிய பிரச்சினை மிகவும் தெளிவான காரணங்களோடு தோன்றிய ஒன்று. அதேபோல் அது கடந்த காலத்தில் முதலாளித்துவ அரசாங்கங்களின் செயல்பாடுகளினால் வளர்ச்சியடைந்தது. தேசிய பிரச்சினை தோன்றியது தொடர்பாக சுருக்கமான விளக்கம் தருவது கஷ்டமான காரியமானாலும் எம்மால் அதை இவ்வாறு இனம் காண முடியும்.

இலங்கையில் முதலாளித்துவ அமைப்பு தோன்றியதோடு தேசியப் பிரச்சினையும் தோன்றுகிறது. இலங்கையில் முதலாளித்துவம் தோன்றிய விஷேட தன்மையும் அதனோடு இணைந்து பிரித்தானிய ஏகாபத்தியவாதிகளின் தலையீடும் இதற்கு நேரடியான காரணங்களாகும்.

முதலாளித்துவ முறைக்கு ம்ுன்பு நமது நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் இனவாரியாகவே வாழ்கின்றனர். முதலாளித்துவ முறை தோன்றிய போது இன அடிப்படையாக வாழ்ந்த இவர்கள் இலங்கை தேசிய இனமாக மாறவேண்டியிருந்து. ஆயினும், அடிப்படையில், முதலாளித்துவ முறைமை இலங்கையில் இயற்கையாக தோற்றம் பெறாததாலும், பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் அடிமை காலனித்துவ முறையில் இலகுவாக நிர்வாகம் செய்வதற்காக, இன அடிப்படையான வரையறை தொடர்ந்தும் உறுதியான முறையில் செயற்படுத்தியதால்.

முதலாளித்துவ முறையினுள் இலங்கையில் ஓர் தேசியம் தோன்றுவதற்கு பதிலாக, இன அடிப்படையான வரையறை முடிவுறாமல் மூன்று தேசிய இனங்களோடு பல்லினங்களைக் கொண்ட முதலாளித்துவ அரசு தோன்றியது. பிரித்தானியர்கள் தமது காலனி ஆட்சியின் போதும் அதன் பின்பும் இனங்களுக்கிடையே இருந்த வேற்றுமையை இல்லாதொழிக்காதிருப்பத்திற்கும் அதை மென் மேலும் வியாபித்தற்கும் அதன் மூலம் மக்களை பிரித்தாளும் ஆட்சியதிகாரத்தை தொடர்ந்தும் செயல்படுத்தினர்.

உதாரணமாக பிரித்தானியர்களின் காலத்தில் அரசியல் அதிகாரத்திற்கோ அல்லது அரச நிர்வாக சபைக்கோ பிரதிநிதிகளை தெரிவு செய்யும் போது இன அடிப்படையான கொள்கையை கடைப்படித்துள்ளது என்பதை நான் உங்களுக்கு நினைவு கூற விரும்புகிறேன். சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற இன அடிப்படையிலேயே பிரதிநிதிகளை தெரிவு செய்தனர். சிங்கள இனத்தை கூட பிரிப்பதற்கு மலை நாட்டினர், கீழ் நாட்டினர் என்று பிரதிநிதித்துவம் செய்தனர். பிரச்சினை தோன்றுவற்குரிய அடிப்படை காரணி இவ்வாறே ஆரம்பத்தில் தோன்றியது. அவர்கள் இலங்கையில் மாகாணங்களை பிரிக்கும்போது கூட புவியியல் அடிப்படையின்றி இன அடிப்படைக்கே முதலிடம் கொடுத்தனர்.

**தோழர் டில்வின் சில்வா:-** ஆம்! தோழர் தலைவர் தெளிவு படுத்தியது போல், பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட மக்களைப் பிரிக்கும் தந்திரத்தை, அதன்பிறகு அதிகாரத்துக்கு வந்த முதலாளித்துவ வாதிகளும் கையாண்டனர். இலங்கை முதலாளித்துவ வர்க்கத்துக்காக 1919ல் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய சங்கம் (ஜாதிக சங்கம்) என்று அரசியல் கட்சியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்களைச் சேர்ந்த முதலாளித்துவப் பிரதிநிதிகள் அங்கம் வகித்த போதும், அதிகாரம் என்பது வந்த போது, தத்தமது இன அடிப்படையில் கட்சிகளை அமைக்கத் தொடங்கினர்.

இதன் மூலம் தான் தேசிய சங்கத்திலிருந்து பிரிந்த தமிழ்த்தலைவர்கள் 1921இல் அகில இலங்கை தமிழ் மக்கள் சபையை அமைத்தனர். 1921ல் மெலே (Malay) சமூகத்தின் மெலே அரசியல் கட்சியை அமைத்தனர். பிறகு முஸ்லிம் சமூகத்தினர் முஸ்லிம் சங்கத்தையும் பண்டாரநாயகா சிங்கள மகா சபையையும் அமைத்துக் கொண்டனர். ஐ.தே.க. 1946ல் ஆரம்பிக்கப்பட்ட போது முஸ்லிம் சங்கத்தினர் அதனோடு இணைத்துக் கொண்டபோதும் தமிழ் சங்கம் அதனோடு சேரவில்லை. அதன்பிறகு இந்த எல்லா அரசியல் கட்சிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக, இனத்தையும் மதத்தையும் உபயோகித்தனர். சிங்கள அரிச்சுவடியின் ஒரு எழுத்துக்கூட தெரியாமலிருந்த, பிறப்பில் கத்தோலிக்கரான பண்டாரநாயக்க இவ்வாறு தான் பௌத்தராக மாறினார். 24 மணித்தியாலங்களுக்குள் சிங்களத்தை அரசகரும மொழியாக்க அறைகூவல் விடுத்ததும் அதனால் தான். இப்படியாக சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அதிகாரத்துக்கு வருவதற்காக தொடர்ந்து இனவாதத்தை தூண்டத் தொடங்கினர். முதலாளித்துவத்தினை பொதுவான நெருக்கடிகளின் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாமல் தவிக்கும் போது, ஏற்படுத்திய வரையரை தான் உரிமைகளை வெட்டுதல், தரப்படுத்தல் கல்வி வெள்ளையறிக்கை ஜனநாயகத்தை இல்லாதொழித்தல் போன்றவை இந்தப் பிரச்சினையை உக்கிரமடையச் செய்து, மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியது. சுருக்கமாகவும், சரியாகவும் சொல்வதெனில் பிரித்தானிய காலனித்துவக் காலக் கொள்கைகளையே, இலங்கையின் நவ காலனித்துவத்துக்குள்ளும் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் மூலம் அப்படியே நடத்திக் கொண்டு போவதுதான் இந்தப் பிரச்சினைக்கு மூல காரணம் என்பதை எம்மால் விளங்கிக் கொள்ள முடியும்.

**நியமுவா: நீங்கள் சொல்வது போல் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் பிரித்தாளும் கொள்கையும், முதலாளித்துவத்தின் பொதுவான நெருக்கடியினால் வியாபித்த தேசிய பிரச்சினையும் நவீன ஏகாதிபத்தியவாதத்தின் உபாயத்தோடு சமப்படுத்துவது எவ்வாறு?**

**தோழர் அமரசிங்க:** இலங்கையின் தேசியப் பிரச்சினை முதலாளித்துவத்துக்குள் எப்படி வளர்ச்சியடைந்தது என்பதை நாம் முன்பு விளக்கினோம். அந்தச் சூழலில் தான் இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் பிரிய வேண்டும் என்ற மனோநிலை கொஞ்சம் கொஞ்சமாக வளரத் தொடங்கியது. தமிழ் முதலாளித்துவவாதிகளிடமும் அப்படியான ஒரு தேவையே் வளர்ந்து கொண்டிருந்தது. இப்படியாகத்தான் இலங்கை அரசியல் வார்த்தைக்ளில் ''பிரிவினை வாதம்'' என்ற பிரபஞ்சம் நிர்மாணிக்கப்பட்டது.

ஏகாதிபத்தியத்துக்குள், பிரபலம் வாய்ந்த பொதுவான தேவை ஒன்று உள்ளது. அதாவது உலக நாடுகளை கூடியவரை சுரண்டுவது. அதற்காக நேரடியான காலனித்துவமாகவோ, நவீன காலனித்துவ கொள்கைகளின் ஊடாகவோ, உலகிலுள்ள நலிந்த நாடுகளை தமது ஆதிபத்தியத்துக்கு கீழ் கொண்டு வர வேண்டியுள்ளது. மறந்து விட வேண்டாம்... ஏகாதிபத்திய வாதிகள் உலக யுத்தத்தை ஆரம்பித்ததும் உலகை தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்வதற்காகத்தான். ஏகாதிபத்திய வாதிகளிடையே உள்ள போட்டியிலும், உலகைப் பங்கு போட்டுக் கொள்ளும் முயற்சியிலும் பலம் வாய்ந்த, பொருளாதாரத்தில் நிறைவு பெற்ற அரசு ஒன்று இருப்பதை ஏகாதிபத்திய வாதிகள் விருப்புவதில்லை. ஒருவகையில் அது அவர்களுக்கு ஒரு அச்சுறுத்தல். மற்ற வகையில் அடிபணிய வைப்பதில் உள்ள கஷ்டம். ஆகையால், உலக நாடுகளை பல வரையறைகளுக்குள் (இனம், மதம், மொழி, கோத்திரம்) பிரித்து வேறாக்கி நலிவடைந்த சிறிய நாடுகள் பலவற்றை உருவாக்கி அனைத்தையும் வெவ்வேறாக தம்பக்கம் இழுத்துக் கொள்வது அவர்களது தேவையாக உள்ளது. இந்த ஏகாதிபத்திய தேவையின் போதுதான் எமது நாட்டின் தேசிய நெருக்கடி உலகைத் துண்டாடும் அவர்களின் தேவைக்கு சமபாடாக உள்ளது. விஷேடமாக சோஷலிச அரசாங்கங்களின் தோற்றத்தோடு இந்தத் தேவை மேலும் அதிகரித்ததாக நாம் நம்புகிறோம்.

**நியமுவா: ஆனால் இலங்கையின் தற்போதைய பிரிவினை வாத அமைப்பு, ஏகாதிபத்தியத்தின் தந்திரோபாயமாக மாறும்போது, அதற்கு முன்னோடியான பிரதான காரணிகள் யாது?**

**தோழர் அமரசிங்க:** ஆம்! நான் அங்கே வருகிறேன்... மேலே விளக்கியவாறு உலகை சிறுசிறு நாடுகளாக துண்டாடி சுரண்டி விழுங்கும் தேவைக்காகவே ஏகாதிபத்தியவாதிகள் பிரிவினை வாதத்தை சரியான வழியெனக் கருதினர். விஷேசமாக இரண்டாவது உலக யுத்தத்தின் பின் அமெரிக்கா ஏகாதிபத்திய நாடுகளில் ஒரு பலமிக்க நாடாக மாறியது. அதன் பின்பு முக்கியமான பிரச்சினைகள் சிலவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. உலகில் சோஷலிச முகாம் தோன்றியதும், ஒடுக்கப்பட்ட நாடுகளில் ஏகாதிபத்திய விரோத போராட்டங்கள் உச்சக்கட்டத்தை அடைந்தது, அவற்றில் பிரதான பிரச்சினையாகும். இந்த சோஷலிச அரச அமைப்புகள் (சோவியத் உள்ளிட்ட) யுத்தவகையிலும் கூட அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு நிச்சியமாகவே அச்சுறுத்தலாக அமைந்தது. இவற்றை பலமிழக்க செய்வதற்கும், விஷேடமாக சோஷலிச முகாம்களை தகர்த்தெறிய திட்டமிட்ட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், அதற்காக கண்ட இலகுவான முறை இந்த நாடுகளிலிருந்த இன, மத, கோத்திர, போன்ற பலதரப்பட்ட வேறுபாடுகளே இப்படியாக மேற்கூறிய வேறுபாடுகளை மேலும் வியாபித்து, அந்த வேற்றுமைகள் மூலம் நாடுகளை துண்டாடுவதற்காகவே அவர்கள் தமது திட்டங்களை வகுத்தனர். இப்படியாக நாடுகளை பிரிப்பது அல்லது துண்டாடுவது அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் உபாயமாக இருந்தது. அந்த உபாயத்தை வெற்றி பெறச் செய்வதற்காக பிரிவினைவாதத்தை முன்னெடுத்தார்கள். அப்படியான சூழல் நிலவிய இடங்களுக்கு பலவிதமாக தலையீடு செய்தனர், உதவி செய்தனர்.

→ 5.

படிப்பகம்

www.padippakam.com



L.T.T.E னரின் கட்டுப்பாட்டுக்குக் கீழிருந்த யாழ்ப்பாண தீபகற்பத்தை முற்றாக ராணுவம் தனது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்திருப்பதாகக் கடந்த சிலதினங்களாக தொடர்புச்சாதனங்கள் மூலமாக அறிவிக்கப்பட்டது. அதன்பின் புனருத்தாரண நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆர்வத்தோடு இருப்பதாக அறிவித்த அரசு, அங்கே சிவில்நிர்வாகத்தை எற்படுத்தப்போவதாகவும் அறிவித்தது. அமைச்சர்கள் சிலர் யாழ். தீபகற்பத்தைப் பார்வையிட சென்றதோடு, விளையாட்டுத்துறை அமைச்சர் விளையாட்டு உபகரணங்களை பகிர்ந்ததாகவும் அறியக்கிடைத்தத. வெண்தாமரை இயக்கக்காரியாலயம் ஒன்றும் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது. இவற்றையெல்லாம் கேள்விபபடும் ஒருவர் இன்றைய அரசு தேசிய இனப்பிரச்சியைத் தீர்த்து விட்டதோ என்ற எண்ணம் தோன்றுவதில் ஆச்சரியப் படுவதற்கில்லை. தமிழ்மக்களின் பிரசசினைகள் தீர்ந்துவிட்டதோ என்று எண்ணினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் யதார்த்தரீதியில் பாாக்கும் போது தேசியப்பிரச்சினைக்குத் தீர்வோ, தமிழ் மக்களின்பிரச்சினைக்கான தீர்வோ சம்பந்தமாக நினைத்துக்கூட பாாக்கமுடியாதவாறு, பிரச்சினை மீண்டும் முதலிலிருந்தே ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகள் தயாரிக்கப்படுவது தெரிகிறது.



# யாழ்ப்பாணத்தைப் பிடித்தபின்.......

இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் வடக்கில் ஸ்தாபிக்கப்படும் சிவில் நிர்வாகத்தைப்பற்றியோ, அரசதெரிவுக் குழுவிடம் இருக்கும் தீர்வு யோசனைகளைப் பற்றியோ மோலோட்டமாகப் பேசுவதை ஒருபுறம் தள்ளிவிட்டு அதனுள்ளே இருக்கும் உண்மையான அரசியல் யாதார்த்தத்தைப் புரிந்து கொள்வதுதான் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக்கொண்டிருக்கும் நம் அனைவருக்கும் பிரயோசனமா்க இருக்கும் L.T.T.E. இயக்கததிற்கும் அரசுக்கும் இடையிலும், L.T.T.E. க்கும் ஏனைய தமிழ் அமைப்புகளுக்கும் இடையிலும் ( பாராளு மன்றத்தில் இருக்கும்) L.T.T.E. ,க்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இடையிலும் அநேக பிரச்சினைகள், எதிர் விரோதங்கள், மோதல்கள் இருந்தது உண்மை. என்றாலும் இந்தக் கோஷ்டிகளிடம் இருந்த மோதல்கள் எல்லாமே கொள்கை சம்பந்தமானவை அல்ல, அதிகாரம் சம்பந்தமான மோதல்கள் என்பதை விளங்கிக் கொள்வது அவசியம். கொள்கை சம்பந்தமாக இவர்கள் பொதுவாக ஒரே கொள்கையுடையவர்களே. அதாவது, பிரிவினைவாத கொள்கையாகும். நாட்டைப்பிரிக்கும் தேவையில் எல்லோரும் ஒரே கொள்கையையே கடைப்பிடித்தனர். பிரிப்பது எப்படி? பிரிப்பது யாருக்கு? என்பதிலே இவர்களுக்கிடையில் பிரச்சினைகள் இருந்தன.

மேலுள்ளவற்றை மீண்டும நினைவு கூரியதுவேறொன்றுக்காகவுமல்ல, மேற்கூறிய வற்றை உண்மைப்படுத்தும் அரசியல் சூழல் ஒன்று இருப்பதாக ,நடக்கும் சம்ப வங்களைப் பார்க்கும் போதுதெரிகிறது. யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்கான அரச இராணுவத்தின் தாக்குதலின்போது, L.T.T.E. மினர் பெரிய எதிர்ப்பொன்றையும் காட்டாது தந்திரோபயமாக பின்வாங்கியதை யாவரும் அறிவர். ''L.T.T.E.யினர் பாரிய எதிர்ப்புக்கள் எதுவுமின்றி பின்வாங்கியதாக " அரசசார்பு தொடர்புசாதனங்கள் கூட ஒருமுறை அறிவித்தன. இதன்மூலம் மிகவும் இலகுவாக இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதையும் எதிர்ப்புக்களின்றி L.T.T.E பின்வாங்கியதையும் வைத்துப் பார்க்கும்போது ஒரு சந்தேகம் தோன்றியிருக்கிறது. அதாவது இந்தச் செயல் இருசாராரினதும் ஒத்துழைப்போடு நடந்ததா எனச் சந்தேகம். இதை உறுதிப்படுத்த இன்னும் பல விஷயங்கள் உண்டு. விமானங்களைத்தாக்கக்கூடிய ஆயுதங்களை வைத்திருக்கும் L.T.T.E யாழ் தீபகற்பத்துக்குச் செல்லும் விமானங்களை தாக்காதிருப்பதும், அரசாங்க அமைச்சர்கள் எவ்வித பயமுமின்றி யாழ்ப்பாணத்துக்கு போவதுக்கு ஆர்வம் காட்டுவதும் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தும் ஒருகாரணமாகும். மற்றது பிடித்துக் கொண்ட யாழ்ப்பாணத்தில், தமது அரசியல் நடவடிக்கைகளை வியாபிப்பதற்காக, ஏனைய தமிழ்அமைப்புக்களுக்கு அரசாங்கம் வசதிகள் செய்து கொடுக்காமையும், யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்ப்பதற்காக விடுக்கப்பட்ட வேண்டுகோளைக்கூட பின்தள்ளிப் போட்டுக்கொண்டிருப்பதையும் பார்க்கும்போது சந்தேகம் மேலும் வலுவடைகிறது.

தற்போது பாராளுமன்றத்திருக்கும் தமிழ்க்கட்சிகள், அரசியல் நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் வருவதை அதிகமாக வெறுப்பவர்கள் L.T.T.E யினரே. எனவே அவர்களை யாழ்ப்பாணம் போகவிடாமல் தடுப்பது, ஒருவகையில் L.T.T.Eயின் தேவையை பூர்த்திசெய்வதும், அவர்களை சந்தோஷப் படுத்துவதுமாகும் என எண்ணத் தோன்றுகிறது. தமது அரசாங்கத்தை நடத்திக்கொண்டு போவதற்கு உதவிசெய்தும் கூட, தமிழ்க்கட்சிகள் யாழ்ப்பாணம் செல்வதை ஜனாதிபதியினால் தாமதப்படுத்தப்பட்டது. அவர்கள் மனஸ்தாபப்படும் பட்சத்தில் தமது அரசாங்கம் பாராளுமன்றத்தில் தோற்றுப்போகும் அச்சுறுத்தல் இருந்தும் கூட அப்படிசெய்யப்பட்டது. பாராளுமன்றத்திலிருக்கும் தமிழ்க்கட்சிகளின் வாக்குகளைப் பெற்று அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு சிலதினங்களுக்கு முன்பே கடைசியாக யாழ்செல்ல அனுமதிக்கப்பட்டது. ( அவர்கள் வாக்களிக்காமல் இருக்கும் பட்சத்தில் அவசரகாலச்சட்டம் தோற்கடிக்கப்படும் ஆபத்திலிருந்ததினால் ) இவற்றை நாம் பார்க்கும்போது அரசு L.T.T.E .யின் திருப்திக்காகவும் அவர்களோடு ஓரளவுபுரிந்துணர்வோடு செயற்படவும் , முற்பட்டிருப்பது தெரிகிறது.

நாம் முன்பே கூறியதுபோல் அரசாங்கத்திற்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் உள்ள பிரச்சினை வேறொன்றுமல்ல, பிடிவாதம் கொண்ட, அடாவடித்தனமான ஓர் அமைப்பாக L.T.T.E இருப்பதால் அரசாங்கத்தினாலும் ஏகாதிபத்தியவாதிகளாலும் அவர்களை கட்டுப்படுத்தி நிர்வகிக்க முடியாது. அன்றி நாடு பிரிக்கப்பட வேண்டுமென்று சொல்வதானல் அல்ல. இப்போதும் கூட அரசாங்கத்தோடு கூட்டு சேர்ந்திருக்கும் சில அமைப்புக்கள் பிரிவினைவாதத்திற்கான அமைப்புகளே என்பதை மறந்து விடக்கூடாது. ஏனென்றால் அரசாங் கத்தோடு கூட்டுசேர்வதில் அவர்களுக்கு எதுவித தடையுமில்லை. எனவே ஏகாதிபத்தியத்திற்கும் அரசாங்கத்திற்கும் பொருத்தமானவகையிலும், தந்திரோபாயமானவகையிலும் L.T.T.E தனது செயற்பாடுகளை மாற்றிக் கொள்ளத் தயாராகும்பட்சத்தில் அடாவடித்தனத்தை குறைத்துக்கொள்ளும் பட்சத்தில் கீழ்ப்படியும் பட்சத்தில் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அரசாங்கத்திற்கும் மிகவும் பெறுமதி வாய்ந்தவர்கள் மற்றைய குழுக்களல்ல, தமக்கு கீழ்ப்படியும் L.T.T.E அமைப்பேயாகும். இதன் மூலம் இவர்களுக்கிடையில் ஒத்துழைப்பு ஏற்படுவதற்கும் இடமுண்டு. ஆனால், L.T.T.Eயின் வழக்கமான தந்திரோபாயமாக இருக்கப்போவதோடு, அதன் பிரதிபலன் என்னவெனில் மீண்டும் புதியமுறையில் நாட்டைப் பிரித்து, பேசும் மொழியினூடாக மக்களைப் பிரிக்கும் நிலைக்கு பிரச்சினை தள்ளப்படுவது மாத்திரமேயாகும் .

அதோடு, இதனால் நாம் இன்னொன்றையும் காணக்கூடியதாக உள்ளது. அதாவது, யாழ் தீபகற்பத்தை தமது தேர்தல் வெற்றிக்காக உபயோகப்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கையாகும். தற்போது அரசு முகம் கொடுத்திருக்கும் பாரிய பிரச்சினை என்னவெனில், பாராளுமன்றத்தில் தமக்குத் தேவையான பலம் இல்லாததேயாகும். இருக்கும் பலம் கூட ஏனைய கட்சிகளின் தயவிலேயே தங்கிநிற்கிறது. தன்னோடு இருக்கும் ஒரு கடசி ( முஸ்லிம் காங்கிரஸ்) போன்றோர் முக்கியமான கட்டத்தில் காலை வாரிவிட்டால் என்ன நடக்கும் என்பதை அரசாங்கம் நன்குணர்ந்திருக்கிறது. அதனால் தேர்தலின்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற அங்கத்துவத்தை அதிகரித்துக் கொள்வதற்தே அவர்களது முக்கிய குறிக்கோளாகும். பிரித்துக்கொண்ட யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டின்கீழ் சிவில் நிர்வாகத்திற்குள் நடாத்தப்படும் தேர்தலின் போது வேறு யாருக்கும் அரசியல் நடாத்த இடம்கொடுக்காமல் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் நியமித்துக் கொள்வதற்கு அரசாங்கம் நினைக்கக் கூடும். L.T.T.E அல்லாத அமைப்புக்கள் யாழ்ப்பாணத்திற்கு வருவதை அரசாங்கம் அவ்வளவாக விரும்பாத காரணம் அதுவாக இருக்கக்கூடும். அதோடு ஒருவேளை L.T.T.E அமைப்பின் அரசியல்பிரிவுக்கு யாழ்ப்பாணத் தேர்தலில் வெற்றியைப் பெற்றுக்கொடுத்து அவர்களோடு கூ சேரவும் கூடும்.

இவற்றிலிருந்து தெரி என்னவென்றால் வடக்கை வெ கொண்டதன் மூலம் அரசாங்கத்திற L.T.T.E அமைப்புக்கும் இடையில் க ஏழுப்பப்படும் உறவாகும். அது பலம்வாய அமைப்பாக மாறும்பட்சத்தில், மக்களி எதுவித வரவேற்பும் இல்லாத E.P.D ,P.L.O.T.E, E.P.R.L.F, T.E.L போன்ற அமைப்புக்களை போவ கப்படுவதற்கு அரசாங்கத்திற்கு எது தேவையும் இல்லாமல் போய்விடும். வெளிநாடுகளும், வெளிநாடுகளிலிருக் பிரிவினை வாதத்திற்கு உதவிசெய் நபர்களும், அரசாங்கத்திற்கும் L.T. க்கும் இடையில் சமாதானத்தூது போ சாத்தியக்கூறுகள் உண்டு. குறிப்ப தற்போது லண்டனில் வசிப்பவரும் L.T. க்கு மிகவும் நெருங்கியவருமான லண் '' இன்டர்நெஷனல் எலட்" என அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத் குமார் ரூபசிங்க போன்றவர்களுக இதுதொடர்பாக எவ்வளவோ செய்வத திறமையுண்டு. குமார் ரூபசிங தற்போதைய ஜனாதிபதியின் சகோதரிய முன்னாள் கணவர் என்றபடிய அவர்களின் உ முறையையும், அறிமுகத்தைய கவனிக்காமல் இருக்கமுடியாது.

இக்காரணங்களை வைத்துப்பார்க் போது, இலங்கையில் தேசியப்பிரச்சின அதன்தீர்வுக்கு செல்வதை விட்டுவிட் ஆட்சியாளர்கள் அதிகாரத்தி இருப்பதற்கும் அதிகாரத்திற்கு வருவதற் போன்ற கபடத்தனமிக்க தேவைகளுக் மீண்டும் அடைக்கப்படும் நிலைச் இட்டுச்செல்லப்படுவது நன்றாக தெரிகிறது. இந்த செயல்களி ன் ஊட சமத்துவத்தை ஏற்படுத்துவதற்காகவே ஜனநாயகம் நிலைநிறுத்தப்படுவதற் தேசிய பிரச்சினை தீர்ந்து அனைத் மக்களிடத்திலும் ஒற்றுமை நில நாட்டப்படுவதோ நடக்கப்போவதில்லை நடப்பதென்னவென்றால் ஆபத்துக்கு அச்சுறுத்தலுக்கும் உட்பட்ட மக்கள பிரச்சினைகளால் பின்னிப்பிணைக்கப்பட் மக்களை, உயிர்பணயமாக வைத்து கொண்டு, அவர்களுடைய ஆபத்தா பிரயோசனம் பெற்று, அவர்களுடை பிரச்சினைகளை விலை பே விழுங்கிக்கொண்டு முதலாளித்து ஆட்சியாளர்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் ஏகாதிபத்திய சக்திகள் இந்நாட்டை சுரண் சூறையாடும் தொழிலை நடாத்தி

கொண்டிருப்பதேயாகும். ''வடக்கை பிடிப்பது" அல்லது ''சிவில் நிர்வாகம் பற்றி கவனத்தில் எடுக்காது துன்பத்திற்குள்ளாக்கப்பட்ட சிங்கள தமிழ், முஸ்லிம் அனைத்துமக்களு தேசியபிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான பாதையை நிலைநாட்டிக்கொள்வதற்கா போராட வேண்டும். ஜனநாயகத்தின் ஊடாகவும், சமத்துவத்தின் ஊடாகவு

தேசியபிரச்சினையைத் தீர்ப்பதற்கு மீண்டு மீண்டும் அரசாங்கத்தை வற்புறுத்துவத மட்டுமல்லாமல், அந்தப் பின்னணியில் உண்மையான தீர்வைக்காணக்கூடி சமத்துவம், சகோதரத்துவம், நிறைந்த சோஷலிஸ இலங்கையைக் கட்டியெழுப் சகல பேதங்களையும்மறந்து கைகோர்த்து கொள்ளவேண்டும்.



www.padippakam.com



# ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்கவுக்கு எதிராக ஜப்பானில் இலங்கைஸ்தானிகர் காரியாலயத்திற்கு முன்னால் எதிர்ப்பு இயக்கம்

## சந்திரிகாவின் பயணம் ரத்துச்செய்யப்பட்டது !
## ஸ்தானிகர் காரியாலயம் மூடப்பட்டது!
## அதிகாரிகள் பாய்ந்தோடினர்!

கடந்த மே மாதம் 14ம் திகதி ஜப்பானுக்கு சென்ற ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்க 14 முதல் 17வரை தங்கியிருந்தார். இவர் ஜப்பானுக்குச் சென்றது நமது நாட்டின் உழைப்பைச் சுரண்டுவதற்கும், வளங்களைக் கொள்ளைமலிவு விலையில் விற்பதற்கு, ஜப்பானிய தனவந்தர்களை அழைப்பதற்கேயாகும்.


இவரது பிரயாணம் அவ்வளவு வரவேற்பைப் பெறவில்லை. 14,15 திகதிகளில் டோக்கியோவில் தங்கி அரசரையும் பிரதமரையும், கோடீஸ்வர வியாபாரிகளையும் சந்திப்பதற்கு 16,17 ஆகிய தினங்களில் குயோதோ, நாரா போன்ற நகரங்களுக்கு உல்லாசப்பயணம் மேற்கொண்டு, இலங்கையில் ஜனநாயக விரோத தன்மையையும் தான்தோன்றித் தனத்தையும் உலக மக்களுக்கு தெரிவிப்பதற்காக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த றேபியா உறுப்பினர்களும், நண்பர்களும் ஜப்பானிய பாட்டாளி வர்க்கத்தின் அமைப்பான NEW WORKERS சர்வதேச அமைப்பும் இணைந்து 15ம் திகதி ஜனாதிபதிக்கெதிராக இலங்கை ஸ்தானிகர் காரியாலயத்தின் முன் எதிர்ப்பு இயக்கத்தை நடத்தியது. எதிர்ப்பு இயக்கம் நடாத்துவதற்காக ஸ்தானிகர் காரியாலயத்திற்கு முன்னால் சென்றபோது அங்கே கலகம் அடக்கும் ஜப்பானிய போலிசாரும் கே.ஜி என்ற இரகசிய பொலிஸைச் சேர்ந்த 15 பேரும் இடத்திற்கு இடம் நின்றனர்.

இதைப் பொருட்படுத்தாது எதிர்ப்பு இயக்கம் ஆரம்பமானது. ஜப்பானிய செயல்வீரர்களோடு சேர்ந்து எழுதப்பட்ட பதாகைகளில் " அவசர காலச்சட்டத்தை உடன் நீக்கு "," ஜனாதிபதி முறையை இல்லாதொழி"," உத்தேச அரசியல் யாப்பைக் கிழித்தெறி" போன்ற வாசகங்களால் இந்த எதிர்ப்பு இயக்கத்தின்போது இலங்கை அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து எழுதப்பட்ட கடிதமொன்றை ஸ்தானிகர் காரியாலயத்தில் ஒப்படைக்க முற்பட்டனர். காரியாலயத்தில் ஒருவருமில்லை என்று கூறிய ஜப்பானிய பொலிஸார், ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க முற்பட்டனர். எமது தோழர்கள் எதிர்த்ததால் அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்கும் போது, ஸ்தானிகர் காரியாலயத்தில் எழுதுவினைஞர் என்று கூறிக்கொண்டு வெளியே வந்தார். அதுவரை காரியாலயத்தில் ஒருவருமில்லை யென்றே பொலிஸார் கூறினர். காரியாலயத்திற்கு வெளியே வந்த பெண்மணி, ஜனாதிபதி இன்று காரியா லயத்திற்கு வரமாட்டா ரென்றும், ஸ்தானிகர், உட்பட அதிகாரிகள் யாருமில்லை யென்றும், ஸ்தானிகர் வந்ததும் தாம் ஒப்படைப்பதாகவும் கூறி கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இங்கே நடந்த இன்னொரு முக்கிய விடயத்தை குறிப்பிடவேண்டும். ஜப்பானிலிருக்கும் பிரபல தொலை தொடர்பு ஸ்தாபனமான ASIA PRESS என்ற ஸ்தாபனம் சாதாரணமாக ஜப்பானுக்கு வரும் வெளிநாட்டு தலைவருக்கான; பரந்த பிரச்சாரமிகு கலந்துரையாடலை ஏற்படுத்திக் கொடுக்கும். ஆனால்...! சந்திரிகாவைச் சந்திக்க அனுப்பவில்லை. இது சம்பந்தமாக அந்த ஸ்தாபனத்தின் தலைவராகிய 'சுகாமாரா' என்பவரிடம் கேட்டபோது அவர் கீழ்க்கண்டவாறு கூறினார். " தேவையில்லை சந்திரிகாவோடு பேசும் அளவுக்கு ஒன்றும் இல்லை. நாம் இலங்கை ஜனநாயகத் தைப்பற்றிக் கேட்டால் இலங்கை ஜனநாயகம் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறது, எதுவித பிரச்சினையுமில்லை, அபிவிருத்தித் திட்டங்களுக்காக உதவித்தேடித்தான் இங்கு வந்தேன் என்று கூறுவார். தோழர் விஜேவீராவின் மனைவியை ஏன் இன்னும் சிறை வைத்திருக்கிறீர் என்று கேட்டால் ஜே.விபியினரால் கொல்லப்படுவார் என்பதால் பாதுகாப்பாக வைத்திருக்கிறோம் என்று கூறுவார். இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு நாம் எமது நேரத்தை வீணடிப்பதற்காக அவரை சந்திக்க வேண்டிய அவசியமில்லையென்று தீர்மானித்தோம்!

மற்றது பாருங்கள் ஆசிய நாடுகளைச் சேர்ந்த எத்தனையோ தலைவர்கள் இங்கு வந்தார்கள் அவர்கள் வந்ததும் தமது வேலைகளை முடித்துக்கொண்டு இரண்டு நாட்களில் திரும்பிச் சென்று விடுவார்கள். ஆனால் சந்திரிகா வைப்பாருங்கள் 14,15 அரசரையும், பிரதமரையும் சந்தித்துவிட்டு,16,17ல் தியோகா, நாரா போன்ற நகரங்களுக்கு உல்லாசபயணம் செய்கிறார். நாமறிந்த மிக்க்குறைந்த பொறுப்போடு கடமையாற்றுபவர் இலங்கை ஜனாதிபதியே"

ASIA PRESS சுகாமாரா அவர்கள் கூறியது இலங்கை மக்களைப் பொறுத்தவரையில் புதியன அல்ல. சர்வதேச மக்கள்முன் எமது தலைவரின் பிரதிபிம்பத்தை அறிந்துகொண்ட சுகாமாரா அவர்களின் கூற்று பொருந்துமல்லவா?



கையளிக்கப்பட்ட கடிதம்....

17 வருடகால பழைய கொலைகார ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியினால் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டிருந்த இலங்கை மக்கள் முன்னால் உங்கள் தலைமையில் அமைந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அதிகாரத்திற்கு வந்தது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி காலத்திந் அனைத்து நாசகார சாதனங்கள் இல்லாதொழித்தல், ஜனநாயகத்தை உண்டாக்குதல் போன்ற ஆயிரக்கணக்கான வாக்குறுதிகளை அளித்தது தான் என்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

ஆனால் தற்போது உங்கள் அரசாங்கத்தில் செயற்பாடுகளைப் பார்க்க எப்படியிருக்கிறென்றால் நாமறிந்தவரையில் பழைய ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியின் சகலவிதமான செயற்பாடுகள், மேலும் பல ( வழிகளில் ) உயர்த்திவைத்துக்கொண்டு, மக்களை அடக்கு முறைக்கு உங்களை உயர்த்திக்கொண்ட, ஜனநாயக விரோத ,தான்தோன்றித்தனமான ஆட்சிக்காக நீங்களும், செயற்பட்டுகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

எவ்வித நியாயமான காரணங்களுமின்றி அவசர காலச்சட்டத்தினை நாடு முழுவதும் விரிவுபடுத்தி, உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திப்போட்டு ,மேதின ஊர்வலங்களைத்தடைசெய்து, வேலைநிறுத்தக்காரர்களுக்கு அடிவைத்து, மாணவர்கள், தொழிற்சங்கங்கள், பிரதிநிதிகள், மக்கள் விடுதலைமுன்னணி உறுப்பினர்களைக் கைதுசெய்தல்கொண்டு மக்களுக்குரிய அனைத்துஜனநாயக உரிமைகளைப் புதைத்துக்கொண்டிருப்பது, எல்லோருக்கும் தெரியும். மேலும் பேசும் மொழியுனூடாக மக்களைப் பிரிப்பதற்கான புதிய உத்தேச அரசியல் யாப்பொன்று இலங்கை மக்கள்மீது பலவந்தமாக திணிப்பதற்கான சூழ்ச்சி, மிகவும் அருவருப்போடு எதிர்க்கும் நாம் உங்களுக்கும் உங்களது தலைமையில் இயங்கும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும் எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம்.

**மக்கள் விடுதலை முன்னணி**

**ஜப்பான்** கிளை

1996-05-15

## 1 → ஈ.டித்தலைவர்கள்....

உடனடியாக செயல்படவேண்டுமென்று இவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

இதன்மூலம் இவர்கள் அரசாங்கத்திற்கு நல்ல பாடம் ஒன்று படிப்பிக்கவேண்டுமென்று இவர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டது, அரசுக்கு தேவையான அவசர காலச் சட்டத்திற்கான வாக்கெடுப் பேயாகும். இதன்மூலம் தாம் வடக்கிற்குப் போவதற்காகவும், அங்கே மக்கள் மத்தியில் தமது கருமித்தனம் மிகுந்த சந்தர்ப்பவாத அரசியல் நடவடிக் கைகளை செய்ற்படுத் துவதற்காகவும் அரசாங்கம் தமக்கு அதற்கான ஏற்பாடுகளை செய்துதராவிட்டால் மேலும் அவசரகாலச்சட்டத்திற்கு ஆதரவாக தமதுகைகளை உயர்த்த மாட்டோம் என்று அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தார்கள். இந்த நிலைமைகளின் கீழ் பாராளுமன்ற மிகவும் தேவையான சந்தர்ப்பங்களில் தமக்கு ஆதரவு வழங்குவதற்காக இருந்த கோஷ்டி ஒன்று தம்மைவிட்டு விலகிப் போகும் அச்சுறுத்தலுக்கும். சவாலுக்கும் அதற்கு மேலாக அவர்கள் வடக்குப் போவதால் அங்கு அரசாங்கத்தின் அரசியல் நடவடிக்கைகள் சொற்பமேனும் பின்னடைவு ஏற்படும்( சிதையும்) நிகழ்வுக்கு ஒரே முறையில் முகம்கொடுத்த அரசாங்கம். கடைசி நேரத்தில் ஈபிடிபியோடு நடத்திய பேச்சுவார்த்தையின் கீழ் அவர்களுக்கு வடக்குக்குச் செல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டுள்ளது. அரசாங்கத்தின் இந்தத் தீர்மா னத்தோடுஇம்முறை அவசரகாலச்சட்டத்திற்கு ஆதரவு அளிப்பதாக இவர்கள் சம்மதித் துள்ளார்கள்.

இந்த நிலைமைகளைப்பற்றி மக்கள் விடுதலை முன்னணியின் ( ஜே.வி.பி) மத்தியக்குழு உறுப்பினரிடம் "செஞ்சக்தி" வினவியபோது அந்தத் தோழர் பின்வருமாறு கூறினார்.

" எல்டிடியின் மரண அச்சுறுத்தலால் தற்காலிகமாக தமிழீழப்பிரிவினை வாதத்தேவையை மறைத்துக்கொண்டு கொழும்புக்கு ஓடிவந்த இவர்களது இனவாத செயல்பாடுகளின் மூலம் ஒருபுறம் இலங்கையில் ஒடுக்கப்பட்ட தமிழ் ,சிங்கள ,முஸ்லிம் மக்களின் ஐக்கியத்திற்கு மிகவும் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் இவர்கள் அதேவேளை மறுபுறம். தமிழ்மக்களின் விடுதலைக்காகப் போராடுகிறோம் , பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்சிறோம். செயற்படுகிறோம் எனக்கூறிக்கொள்ளும் இவர்கள் மக்களை அடக்குமுறை செய்யவும். கொலைசெய்வதற்கும் குண்டுமழை பொழிவதற்கும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதன்மூலம் அம்பலமாகும் இவர்கள் மக்கள் மத்தியில நிராகரிக்கப்படுவது தவிர்க்கமுடியாத ஒன்று ".

## 6. → பொருட்களின் விலை......

பாணும் 8 கிலோ மைசூர் பருப்பும் மைசூர் பருப்பும் மாத்திரமே வாங்கமுடியும் மக்களுக்கு சுமர்த்தி கொடுத்ததாக வாய்ச்சவடால்விடும் பொதுஜன ஐக்கிய முன்னணி தலைவர்களும் தலைவிகளும் இந்தச் சாதாரண உண்மைக்கு முன்னால் செவிடர்களாகவும் ஊமையர்களாகவும் இருக்கின்றனர். நாளுக்கு நாள் அடக்கு முறைக்கு வழிகளை முன்னெடுத்து வைக்கின்றனர். அனைத்து முதலாளித்துவ நெருக்கடிக்கு முன்னால் இவர்களால் வேறொன்றும் செய்யமுடியாமல் உள்ளது.

எப்படி இருப்பினும், மக்களை வாழவைப்பதற்காகக் கூறி அதிகாரத்திற்கு வந்து, தன்னையும் ,தனது குடும்பத்தினரையும் நண்பர்களையும் சமுர்த்திகரமாக வாழவைப்பதற்காக இன்டர்கூலர் கலாச்சாரத்தை உருவாக்கி, நாளுக்கு நாள் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக்கு முன்னால் ஊமையாக இருக்கும் அரசாங்கத்திற்கு அனைத்துநுகர் பொருட்களின் விலையையும் கீழிறக்கும்படியும், உதவிப்படியும் சம்பளமும் பெறுவோருக்கு வாழ்வதற்குப் போதுமான அளவு சம்பளத்தையும் நிதிஉதவியையும் பெற்றுக்கொடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும்படி செஞ்சக்தி வற்புறுத்துகிறது.

படிப்பகம்

www.padippakam.com


# செஞ்சக்தி

198/19, பஞ்சிகாவத்தை வீதி, கொழும்பு 10.
தொலைபேசி : 345594, 868464

198/19, PANCHIKAWATHTHA ROAD, COLOMBO 10


## நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய சில பிரச்சினைகள்

நாட்டுமக்கள் என்ற வகையில், நாம் இன்று ஓர் தீர்மானகரமான நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். மேலும் நாம் போகவேண்டியது எந்தப்பாதையில் என்பதை முடிவுசெய்யவேண்டியது இந்த சந்தர்ப்பத்தில் என்பதால், இநநிமிடம் மிகமிக முக்கியமானது.

பொதுஜன ஐக்கியமுன்னணி முதலாளித்துவ அரசாங்கமும், இனவாத 'பிரிவினைவாத' புலிகள் இயக்கமும் ஒன்றுசேர்ந்து நடத்திக்கொண்டு போகும் இனவாதவலையில் மேலும் நாம சிக்குண்டுக் கிடப்பதா...? தற்போதைய நிலையில் எம்முன்னால் நிறுத்தப்பட்டிருக்கும் முக்கியமான கேள்வி இதுவாகும்.

உண்மையிலேயே உலகில் எந்த ஒரு இடத்திலாவது துன்பப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, சுதந்திரத்தையும் விடுதலையும் பெற்றுக்கொடுக்க இனவாதத்தால் முடியாமல் போயிருக்கிறது. அது எப்போதும் சுரண்டு வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்குமே வெற்றியைப் பெற்றுக்கொடுத்துள்ளது. இப்படி நாம் சிந்திக்கும்போது நாம் சிக்கியிருக்கும் பயங்கர இனவாத விளையாட்டினால் எமக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்க முடியுமா?.... முடியாது. அதனால் வெற்றியடைவது ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாங்களல்ல, சிங்கள, தமிழ், முஸ்லிம் முதலாளித்துவவாதிகளும் ஏகாதிபத்தியவாதிகளுமேயாகும்.

ஒடுக்கப்பட்ட மக்களை பேசும் மொழியினூடாக பிரித்தாள விரும்புவது வேறு யாருமல்ல, முதலாளித்துவ ஆட்சியாளர்களே. ஏனெனில் அப்பொழுதுதான் மக்களைச் சுரண்டுவதற்கு அவர்களுக்கு இலகுவாக இருக்கும் பிரிவினைவாதம் ஏகாதிபத்தியவாதிகளின் தேவையாயி ருப்பதும் அப்படித்தான். சின்னச் சின்ன நலிவடைந்த நாடுகளை அதிகமாக உருவாக்குவது நவீன ஏகாதிபத்தியத்தின் தந்திரோபாயமாகும். அப்போதுதான் பலமிழந்த அந்த நாடுகள் அனைத்தையும் நிர்வகிப்பதற்கு ஏகாதிபத்தியவாதிகளுக்கு இலகுவாக இருக்கும். எம்மை அறியாம லேயே நாமும் வீழ்ந்திருப்பது இந்த வளையிலல்லவா?

(இந்த உண்மையை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற வகையில் அடுத்து நாம் எதைப்பற்றி சிந்திப்பது?)

நாம் ஒடுக்கப்பட்டது எப்படி? எதனால்?

அதை இல்லாமல் செய்வது எப்படி? இவைதான் இச்சந்தர்ப்பத்தில் எம்மால் எமது வருங்கால சந்ததியினருக்காக விடைதேட வேண்டிய வினாக்களாகும்.

எம்மை ஒடுக்கியது சமத்துவ மின்மையே! சட்டத்தில், நிர்வாகத்தில் மாத்திரமன்றி ஏனைய எல்லா விடயங்களிலும் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் இந்த முறையிலேயே எம்மை நிர்வாகித் ள்ளார்கள். முதலாளித்துவ முறைமையின் மூலமே இந்த சமத்துவமின்மை ஏற்படுத்தப்பட் டது. அது முதலாளித்துவத்துக்கே உரிய இலட்சணமும் பிறப்புரிமையுமாகும்.

இந்த சமத்துவமின்மையை இல்லாதொழிப்பது எப்படி? இனவாதம் அதைச் செய்யுமா?....இல்லை! சமத்துவமின்மையை அறிவிக்கும் ஒரு மார்க்கமேயன்றி அதற்கு தீர்வுகாணும் ஒரு மார்க்கமாக ஏற்றுக்கொள்ள எம்மால் முடியாது. சமத்துவத்தின்மூலமே சமத்துவமின்மையை தோற்கடிக்கமுடியும். பிரிவினைவாதமென்பது சமத்துவமின் மையை சட்டபூர்வமாக் கிக்கொள்வ தேயன்றி சமத்துவத்தை நிலை நாட்டுவதல்ல.

விடை துவமென்றால், அதுஎப்படி ஏற்படும்? முதலாளித்துவத்திற்கு ஒரு போது மத்துவத்தைத் தரமுடியாது. ஆகவே, இந்த மண்ணில் சோஷலிஸத்தைக் கட்டியெழுப் புவதன்மூலமே சமத்துவத்தை ஏற்படுத்தமுடியும். அது வெறுமனே ஏற்படாது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களினதும் முற்போக்கு புரட்சிகர எண்ணம் கொண்ட மக்களின் ஒத்துழைப்போடும் செயறதிறனாலும் பெற்றுக்கொள் ளக்கூடிய ஒன்றே சமத்துவம்.

எம்மை வருத்தும் இந்த வேதனைக்கு தீர்வுசமத்துவமேயன்றி வேறென்ன? சமத்துவத்தை நோக்கி எமது பயணத்திற்கு தடையாக இருக்கும் அனைத்தையும் இன்றே தோற்கடிக்க தலைமை ஏற்க வேண்டுமல்லவா...? சுதந்திரத்திற்கும் விடுதலைக்குமாகாத முதலாளித்துவ இனவாத மோசடிமிகுந்த பாதைக்கு விடை கொடுத்துவிட்டு, சமத்துவத்திற்கான சோஷலி ரட்சிகரப்பாதைக்கு அடியெடுத்து வைக்கவேண்டுமல்லவா?

என்று எம்மால் இந்த கேள்விகளுக்கு வெற்றிகரமான பதிலளிக்க முடியுமா, அதுவரை அழிவைத்ததவிர வேறொன்றும் எமக்கு உரித்தாகாது.

## போலி தேர்தல் வாக்குறுதியளித்த அமைச்சர் பௌசிக்கு மக்கள் டிமிக்கிக் கொடுக்கத் தயாராகிவிட்டனர்

கடந்த பொதுத்தேர்தலின் போது மத்திய கொழும்பு பாராளுமன்ற உறுப்பினரும் தற்போதைய சுகாதார அமைச்சருமான பௌசி கொழும்பு தெமட்ட கொடயிலுள்ள ஆராமியபிளேஸில் 125 தோட்டத்திலிருக்கும் சுமார் 300 வாக்காளருக்கு தம்மை மந்திரியாக்கினால் சுகாதாரம், வீடு, தண்ணீர், மின்சாரம் போன்ற வசதிகளை பெற்றுத்தருவதாக கூறிய அமைச்சர் தேர்தலில் வெற்றி பெற்ற பின்பு வந்து அப்பிரதேசத்தில் முக்கியமானவர்களில் ஒருவரும் பொதுஜனஐக்கிய முன்னணிக்காக அரும்பாடுபட்டு உழைத்தவருமான திரு. அந்தோனி ஜோன் அவர்களின் தோள்மீது கைபோட்டு அங்குள்ள மக்களுக்கு கும்பிடு போட்டு நாம் ஆட்சிபீடம் ஏறியிருப்பது உங்களுக்காகவே, பொதுமக்களுக்கு சேவை செய்வதற்காகவேயாகும். அதனால் கூடிய சீக்கிரத்தில் உங்களது மின்சாரம், தண்ணீர், மலசலக்கூடம் போன்ற அனைத்துப்பிரச்சினைகளையும் தீர்த்து தருகிறோம்" என்று மனதைக் குளிரவைக்க இவர், இப்போது மக்களாவது, மண்ணாங்கட்டியாவது என நினைத்து அப்பக்கம் தலைகாட்டாமல் மக்களைத் தவிக்க விட்டுவிட்டு இரண்டு வருடமாக தலைமறைவாகிய நிலையில் தனதுஅமைச்சர் பதவியின் சுகபோக சொகுசு வாழ்க்கையை தாராளமாக அனுபவித்த வண்ணம் மக்களை மறந்துமக்களுக்கு டிமிக்கி கொடுத்துள்ளார். எனவே தற்போது அப்பிரதேச மக்கள் அடுத்த தேர்தலுக்காகக் காத்திருக்கிறார்கள், பௌசி டிமிக்கிக் கொடுத்து சீட்டைக்கிழிப்பதற்காக

எனவே, பிரதேசவாசிகள் வாக்குறுதிகளை மறந்து, முதலாளி வர்க்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு நாட்டையும், மக்களையும் அழிவுக்கு இட்டுச்செல்லலும், பொது ஜனஐக்கிய முன்னணிக்கும் 17 வருடமாக நாட்டை கொலைக்களமாக மாற்றிய ஐக்கிய தேசியக்கட்சிக்கும் ஒய்வுகொடுத்து, அவர்களின் சின்னத்தை நூதனசாலைக்குஅனுப்பிவிட்டு மக்களின் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய மக்களை காட்டிக் கொடுக்காத மக்களின் விடுதலைக்காக உயிர்த்தியாகம் புரிந்து தொடர்ந்தும் மக்களுக்காக மக்கள் மத்தியில் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து மக்களின் உரிமைக்காகப்போராடும் மக்கள் விடுதலை முன்னணிக்கு அடுத்த தேர்தலின்போது வாக்களிப்பதாக உறுதியளித்துள்ளனர். அப்பிரதேசத்தில் திரு. அந்தனிஜோன் அவர்களோடு சென்ற எமது நிருபருக்கும் ஏனையோருக்கும் இன்முகத்தோடு வரவேற்பளித்து மக்கள் விடுதலை முன்னணிக்கு தமது ஆதரவைத் தெரிவித்துக்கொண்டனர்.

அதனால் பௌசி அமைச்சரே! வாக்குறுதிகளை மீறிய நீங்கள் அப்பக்கம் போவதை மறந்துவிடுங்கள். ஏனெனில் அம்மக்கள் பொதுஜனமுன்னணிக்கும் நாட்டைத்தின்ற முதலாளி வர்க்கத்திற்கும் நல்லபாடம் புகட்ட தயாராகிவிட்டனர். பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் தலைமையில் பால் வேற்றுமையைத் தவிர அவர்களது கொள்கை சரி ஒன்றே என்பதையும் நீலநிற U.N.P(P.A) செய்து வருகிறது. அதனால் அடுத்த தேர்தலில் எமது வாக்குகள் அனைத்தும் சிவப்பு நிற J.V.Pக்கு என்று மிக உறுதியாக அப்பிரதேசவாசிகள் கூறினர்.

## பொருட்களின் விலைவாசிகளை இறக்கு

அத்தியவசிய நுகர்வு பொருட்களின் விலையை நியாயமான நிலைக்கு கொண்டு வருவதாகவும் மக்கள் தொகையில் மிகவும் வறிய பிரிவுகளுக்கு, நியாயமான கொடுப்பனவுகள் வழங்குவதாகவும் பொதுஜன ஐக்கிய முன்னணிதலைவர்களும் தலைவிகளும் அன்று தேர்தல் மேடைகளில் அளித்த வாக்குறுதிகளை இன்று மீறியுள்ளனர். 1987ல் ஜே. ஆர். ஜயவாத்தனா செய்தது போல 1994ல் ஆட்சிக்கு வந்தவுடன் பானின் விலையை 3.50க்கு இறக்கி மக்களை ஏமாற்றிய பொதுஜன ஐக்கிய முன்னணி வெகுநாட்கள் செல்லுமுன்னே பாணின் விலையை எத்தனையோ முறை கூட்டினர். தற்போது பாணின் விலை 5.50 சதம். இதைத்தவிர அத்தியாவசிய பொருட்களான அரிசி, தேங்காய், பருப்பு, சீனி, குழந்தை பால்மா போன்ற எல்லா பொருட்களின் விலையையும்அதிகரித்துள்ளது. வேகமாக விலையேறும் பொருட்களின் தேங்காயும் பருப்பும் கூட அடங்கும். 17 வருட ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிகாலத்தில் தேங்காயின் விலையேற்றம், 70 லிருந்து ரூபா5,6 இடைபட்டிருந்ததோடு, பொதுஜன ஐக்கியமுன்னணி ஆட்சிபீடமேறி 1 வருடமும் 9 மாதமும் கடந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில்அது ரூபா 10, 12 ரூபாவாக எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு விலை உயர்ந்திருக்கிறது.

மைசூர் பருப்பின்விலை 1994 ஆகஸ்டில் ரூ. 32/=, ரூ. 36= வரை இருந்து, ரூ. 60/= வரை விலை உயர்ந்ததோடு, அரிசி ஒரு கிலோ 17ல் இருந்துரூ. 20/=வரை விலை ஏறியுள்ளது. குழந்தைப் பால்மாவின் விலையும் அப்படித்தான். 1994 ஆகஸ்டில் ரூ. 56= ஆகஇருந்த 400 கிரேம் லக்ஸ் பிரே பக்கெட்டின்விலை தற்போது ரூ. 26ல் அதிகரிக்கப்பட்டு ரூ. 80 க்கு விற்கப்படுகிறது. ஏனைய பால்மாக்களின் விலை அதற்கேற்றவகையில் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. ரூ. 60/=, 75=க்கு விற்கப்பட்ட அங்கர் பால்மா ரூ. 84க்கும் நெஸ்பிரே ரூ. 60, 75/=இருந்து 78/= வரைக்கும ஹைலன்ட் ரூ. 52.50 சதத்திலிருந்து, ரூ. 65 வரையிலும், Fபாம் டிரஸ்ட் ரூ. 57.00லிருந்து ரூ. 75 வரையில் விலை ஏறியுளளது.

தினச்சம்பளமும் மாதச்சம்பளமும் பெறும் சுமார் (54,00000) 54 லட்சம் உழைக்கும் மக்களினால் இந்த விலை உயர்வைத் தாங்கிக் கொள்ள முடியாது. அத்தோடு ஆகக்குறைந்த வருமானமுள்ள ரூ. 1000 /= சமுர்த்தி திட்டத்தின் கீழ் பெறும் ஒரு லட்சம் மக்களாலும், அதற்கு சற்று அதிக வருமானமுள்ள ரூ. 500 சமுர்த்தித் திட்டத்தின்கீழ் பெறும் (110000) பதினொரு லட்சம் வறிய மக்களாலும் இந்த விலையேற்றத்தைத் தாக்குப் பிடிக்கமுடியாதுள்ளது.

95ல் கொடுத்த சமுர்த்தி ரூ. 500/=ஐக் கொண்டு 142 இராத்தல் பாணும் 15 கிலோ மைசூர் பருப்பு வாங்கக்கூடியதாக இருந்தது. ஆயினும், தற்போது90 இராத்தல்

→ 5

கொழும்பு 10 பஞ்சிகாவத்தை வீதியுல் 198/19 மில் வசிக்கும் எம் டில்வின் சில்வா அவர்களால் ரேடியன் கலர் கிரபிக்கஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.